செ.வெ.எண்: 146 நாள்: 11.09.2026

**தென்காசி மாவட்டம்**

**IIT/IIM/IIIT/NIT மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த (BC. MBC/DNC) மாணவ, மாணவிகள் 2026-27ஆம் கல்வி ஆண்டிற்கான புதியது மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை விண்ணப்பித்தல்" – மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள்**

---

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள IIT/IIM/IIIT/NIT மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு/பட்ட மேற்படிப்பு பயிலும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள BC.MBC/DNC மாணவர்களுக்கு, கற்பிப்பு கட்டணம், சிறப்பு கட்டணம். தேர்வு கட்டணம் மற்றும் இதர கட்டாய கட்டணங்கள் அல்லது ஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

**விண்ணப்பம் பெறும் இடங்கள்:**

- பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை-5
- மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், சென்னை-5
- மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்)
- இணையதளம்: www.bcw.tn.gov.in

**குறிப்பு:** மத்திய/மாநில அரசின் இதர கல்வி உதவித் திட்டங்களில் பயன்பெறும் மாணவர்கள் இத்திட்டத்திற்கு தகுதியற்றவர்கள்

**சமர்ப்பிக்கும் முறை:**

- விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கல்வி நிறுவனத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
- கல்வி நிறுவனம் Bonafide Certificate உடன் பரிந்துரை செய்து, சம்பந்தப்பட்ட நலத்துறைக்கு அனுப்ப வேண்டும்.
- Renewal விண்ணப்பங்கள் 31.10.2026-க்குள். Fresh விண்ணப்பங்கள் 30.11,2026-க்குள் அனுப்பப்பட வேண்டும்.
- Even Semester கட்டண இரசீதுகள் 15.01.2027-க்குள் அனுப்பப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**